


# விவேகானந்தரின் விவேகக் கதைகள்

# விவேகானந்தரின் விவேகக் கதைகள்

தொகுத்தவர்
**சுவாமி அஜராத்மானந்தர்**

**ஸ்ரீராமகிருஷ்ண மடம்,**
16, ஸ்ரீராமகிருஷ்ண மடம் ரோடு,
மயிலாப்பூர், சென்னை-600 004.

வெளியிடுபவர் :
© தலைவர்,
ஸ்ரீராமகிருஷ்ண மடம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.

உரிமைப் பதிவு பெற்றது
மூன்றாம் பதிப்பு
III-10M 3C-4-93
ISBN 81-7120-310-8

அச்சிட்டவர் :
ஸ்ரீராமகிருஷ்ண மடம் அச்சகம்
மயிலாப்பூர், சென்னை 600 004.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பிச்சைக்கார அரசன் | 1 |
| 2. | மூன்று வரங்கள் | 3 |
| 3. | பொறுமைக்குக் கிடைத்த வெகுமதி | 5 |
| 4. | உயர்ந்தது எது? இல்லறமா, துறவறமா? | 7 |
| 5. | உண்மைத் தியாகம் | 15 |
| 6. | நாயின் சுருண்ட வால் | 19 |
| 7. | கிணற்றுத் தவளை | 23 |
| 8. | கடமையே தெய்வம் | 25 |
| 9. | நாரதரும் மாயையும் | 30 |
| 10. | தண்டனை பெற்ற அமைச்சர் | 33 |
| 11. | புல்மேயும் சிங்கங்கள் | 35 |
| 12. | ஆன்மிக வீரம் | 37 |
| 13. | அசுரனும் தேவனும் | 38 |
| 14. | வில்வமங்களா | 40 |

## முன்னுரை

கதை என்ருல் எல்லோரும் விரும்புவார்கள். ஒரு நல்ல கதை சொல்லும் போது பாட்டியின் மடியில் இருக்கும் குழந்தை, சாய்வு நாற்காலியில் சாய்ந்திருக்கும் தாத்தா ஆகிய இருவரும் கதையை மிகவும் கவனத்துடன் கேட்பார்கள். ஆனல் கதை என்பது உற்சாகப்படுத்துவதற்கு மட்டுமல்லாமல் அறிவுறுத்துவதற்கும் சொல்லப்படுகிறது. அது நம்முடைய அறிவை பிரகாசப்படுத்துவதுமட்டுமல்லாமல், நமது வாழ்க்கை முறையையும் நன்னெறிப்படுத்த உதவும். எனவே பண்டைக் காலத்திலிருந்தே புகழ் பெற்ற மகான்கள் நாம் நிறைநிலே அடையும் வழியில் ஊக்கம் உண்டாகும் பொருட்டு நீதிக் கதைகளேயும் பழங்கதைகளேயும் பயன்படுத்தியுள்ளார்கள். புத்தரும் இயேசுவும் மற்றும் நம் காலத்தைச் சேர்ந்த ராமகிருஷ்ணரும் நமக்கு மிக அழகான கதைகளின் மூலம் நுட்பமான தெய்வத்தன்மையை வெளிப்படுத்துவதற்கும் நமது வாழ்வை மேலானதாக ஆக்குவதற்கும் உதவியிருக்கிருர்கள் இத்தகைய உயர்ந்த வழியில் வந்தவர் சுவாமி விவேகானந்தர்.

சுவாமிஜி அவர்கள் கதைகளேச் சுருக்கமாக உரைக்கும் கலேயில் நிகரற்றவர். அவற்றை சிறுவர்களுக்கு எளிதில் புரிந்து கொள்ளும் வகையில், அனேவருக்கும் தெரிந்த ஆண்கள் மற்றும் பெண்களின் பெயர்களேக் கொண்ட கதாபாத்திரங்களின் மூலமும், அனேத்து விளக்கங்களேயும் விரிவுபடுத்தி அளித்திருக்கிருேம். இக்கதைகள் உயர்ந்த வகையில் வேறு படுத்தப்பட்டு, அவை போதிக்கும் நன்னெறிகள் சிறுவர்களும் வயது முதிர்ந்தவர்களும் மிகுந்த பயனடையும் வகையில் உள்ளன. எனவே இதைப் படித்து மன நிறைவு கொள்வீர்களாக.

சென்னே
8-8-87

பதிப்பாசிரியர்.

## 1. பிச்சைக்கார அரசன்

**பெருமன்னன்** ஒருவன் காட்டிற்கு வேட்டையாடச் சென்ருன். அங்கு ஒரு முனிவரைக் கண்டான். அவரோடு சிறிது நேரம் உரையாடிய மன்னன் பெருமகிழ்ச்சியுற்று, தன்னிடமிருந்து ஏதாவது நன்கொடையொன்றைப் பெற்றுக் கொள்ளுமாறு அவரை வேண்டினுன். முனிவரோ, ''எதுவும் வேண்டாம். என் நிலேமையில் மனத்திருப்தியை முற்றும் பெற்றுள்ளேன். இம்மரங்கள் எனக்கு உண்ணப் போதிய கனிகளேக் கொடுக்கின்றன; இவ்வழகிய தூய நீரோடைகள் எனக்கு வேண்டிய நீரையெல்லாம் தருகின்றன; இக்குகையிலே நான் உறங்குகிறேன். நீ ஒரு மன்னுதி மன்னனுயினும், உன் நன்கொடைகளே நான் ஏன் பொருட்படுத்த வேண்டும்?'' என்று கூறினுர். பேரரசனே, ''என்னேத் தூயவனுக்கவும், மகிழ்விக்கவுமே, ஏதேனும் ஒன்றை நன்கொடையாகப் பெறுக; நகருக்குள் என்னேடு எழுந்தருள்க'' என்று வேண்டினுன். இறுதியில் முனிவர் பேரரசனேடு செல்ல இசைந்தார். அவரை அரண்மனேக்கு அழைத்துச் சென்ருன். அங்கே அவர் பொன்னும் மணியும், பளிங்கும், மற்றும் பல வியத்தகு பொருள்களும் இருக்கக் கண்டார். செல்வமும் அதிகாரமும் எங்கும் விளங்கின. மன்னன் முனிவரைக் காத்திருக்குமாறு கூறி, ஒரு மூலேக்குச் சென்று, ''இறைவா! இன்னும் மிகுந்த செல்வமும், மக்களும், நாடும் எனக்கு அருள்க'' என்று பிரார்த்தனே செய்யத் தொடங்கினுன். இதற்கிடையே முனிவர் எழுந்து வெளியே செல்ல முற்

பட்டார். அவர் செல்வதைக் கண்ட பேரரசன், அவரைப் பின் தொடர்ந்து, ''ஐயா, நில்லுங்கள்; நீங்கள் எனது நன்கொடையைப் பெருது செல்கின்றீர்களே!'' என்ருன். முனிவர் அவனை நோக்கி, ''மன்னு! பிச்சைக்காரரிடம் நான் இரப்பதில்லை. உன்னுல் என்ன கொடுக்க இயலும்? நீயே பொழுதெல்லாம் பிச்சை கேட்டுக் கொண்டிருந்தாய்'' என்று கூறினுர். அன்பு வெளிப்படும் முறை இது வன்று. இறைவனிடம், ''இதைத் தா, அதைத்தா'' என்று நீ வேண்டுவாயாளுல் அன்பிற்கும் வியாபாரத்திற்கும் என்ன வேறுபாடு?

## 2. மூன்று வரங்கள்

ஏழை ஒருவன் ஒரு தேவதைக்குத் திருப்தி ஏற்படும்படி நடந்து கொண்டான். அந்தத் தேவதை அவன் முன்னர்த் தோன்றி, மூன்று சொக்கட்டான் காய்களைக் கொடுத்து, அவற்றை உருட்டி மூன்று வரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறியது. மகிழ்ச்சி அடைந்த அந்த மனிதன் வீடு திரும்பி, தன் மனைவியிடம் விவரத்தைச் சொன்னுன். பண ஆசை பிடித்த அவளோ பணத்திற்காகக் காயை உருட்டும்படிச் சொன்னுள். அதற்கு அவன், 'நம் இருவருக்கும் மூக்கு மிகவும் அசிங்கமாக இருக்கிறது. ஊரார் நம்மைப் பார்த்து சிரிக்கிருர்கள். முதலில் அழகான மூக்கு வேண்டும் என்று காயை உருட்டுவோம்' என்ருன் ஆனுல், பணத்தை விரும்பிய மனைவியோ காயை உருட்ட விடாமல் கணவனின் கையைப் பிடித்துக் கொண்டாள். கணவனே திமிறிக் கையை விடுவித்துக் கொண்டு ''எங்கள் இருவருக்கும் அழகான மூக்குகள் அமையட்டும்; மூக்குகளைத் தவிர வேறு எதுவும் எங்களுக்கு வேண்டாம்'' என்று காயை உருட்டி விட்டான். உடனே அவர்கள் இருவர் உடம்பிலும், அழகிய ஆனுல் பல மூக்குகள் தோன்றி விட்டன. பல மூக்குகள் இருப்பது அவர்களுக்கு மிகவும் தொந்தரவாக இருந்ததால் மூக்குகளே வேண்டாம் என்று காயை உருட்ட அவர்கள் இருவரும் சம்மதித்தார்கள். அதன்படி உருட்டியப் போது மூக்குகளே இல்லாமல் போய் விட்டன. இப்படி இரண்டு வரங்கள் வீணுகிவிட்டன; என்ன செய்வது என்று அவர்களுக்கு ஒன்றும்

புரியவில்லை. கேட்பதற்கு இனி ஒரே ஒரு வரம் தான் மீதி இருந்தது. மூக்குகள் இல்லாத காரணத்தால் அதிக விகாரமாக இருந்தது. இந்த நிலையில் வெளியில் போக அவர்கள் மிகவும் நாணினார்கள். அழகிய மூக்குடன் வெளியே போனால் உங்களுக்கு அழகிய மூக்கு எப்படி வந்தது என்று ஊரார் கேட்பார்களே, அதற்கு என்ன பதில் சொல்வது என்று அஞ்சினார்கள். தங்கள் மடமையை நினைத்து வருத்தப் பட்டார்கள். அதனால், ''அழகற்ற பழைய மூக்கு தங்களுக்கு வந்தால் போதும்'' என்று காயை உருட்டினார்கள். ''ஆசைப்படாதே'' ஆசைப்படுவது உனக்கு கிட்டும்; அதோடு கூட, பந்தமும் வரும்''' என்பதை இந்தக் கதை விளக்குகிறது.

# 3. பொறுமைக்குக் கிடைத்த வெகுமதி

நாரதர் என்பவர் ஒரு தேவ முனிவர். மனிதர்களிடையில் பெரிய யோகிகளான முனிவர்கள் இருப்பது போன்று, தேவர்களுக்குள்ளேயும் யோகிகள் இருக்கின்றனர். நாரதர் தேவர்களில் மிகப் பெரிய யோகி. அவர் எங்கும் சஞ்சரிப்பது உண்டு. ஒரு நாள் ஒரு காட்டின் ஊடே அவர் செல்லும் போது, ஒரு முனிவரைக் கண்டார். வெகு காலம் தியானித்து நகராமல் தவம் செய்து கொண்டு இருந்ததால், அந்த முனிவரின் உடலைச் சுற்றிக் கரையான் எறும்புகள் ஒரு புற்றைக் கட்டி விட்டன. அந்த முனிவர் நாரதரை அழைத்து, ''எங்கே போகிறீர்?'' என்று கேட்டார். ''நான் சுவர்க்கத்திற்குச் செல்கிறேன்'' என்று நாரதர் விடையளித்தார். ''அப்படியானால், ஆண்டவன் எனக்கு அருள் புரிந்து எப்பொழுது முக்தி அளிப்பார் என்று தெரிந்து வர வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார் அவர்.

நாரதர் சிறிது தூரம் சென்ற பின் மற்றொரு மனிதனைக் கண்டார். அவன் பாடிக் குதித்து நடனமாடிக் கொண்டு இருந்தான். அவன் நாரதரைக் கண்டு, ''நாரதரே! எங்கு செல்கிறீர்?'' என்று வினவினான். அவனது குரலும் செயலும் அவன் பைத்தியக்காரனோ என எண்ணும்படிச் செய்தது. நாரதர், ''நான் சுவர்க்கத்திற்குப் போகிறேன்'' என்றார். ''அப்படியானால் எனக்கு எப்போது விடுதலை கிடைக்கும் என்று கேட்டு வாருங்கள்'' என்றான் அவன். நாரதர் சென்றுவிட்டார். சிறிது காலம் சென்ற பின்பு நாரதர் அக்காட்டின் வழி

யாகத் திரும்பி வந்தார். உடலைச் சுற்றிப் புற்று வளர்ந்திருந்த முனிவர், ''நாரதரே! என்னைப் பற்றி பகவானிடம் கேட்டீரா?'' என்றார். ''ஆம்'' என்றார் நாரதர். ''பகவான் என்ன சொன்னார்?'' என்று கேட்டார் முனிவர். ''நீ இன்னும் நான்கு பிறவிகளுக்குப் பின்பு முக்தி அடைவாய், என்று பகவான் கூறினார்'' என்றார் நாரதர். அந்த முனிவர் அழுது, புலம்பி, ''என்னைச் சுற்றிப் புற்று மூடும்வரை பல வருடங்கள் தியானித்தேன். அப்படிச் செய்தும் இன்னும் முக்தி பெற நான்கு பிறவிகள் இருக்கின்றனவே!'' என்றார்.

நாரதர் மற்ற மனிதனிடம் சென்றார். ''பகவானிடம் கேட்டீரா, நாரதரே?'' என்றான் அவன். ''ஆம். கேட்டேன். அந்தப் புளிய மரத்தைப் பார். அதில் எத்தனை இலைகள் உள்ளனவோ அத்தனை பிறவிகளுக்குப் பின்பு உனக்கு முக்தி கிட்டும்'' என்று நாரதர் கூறினார். அந்த மனிதன் மகிழ்ச்சியால், ''இவ்வளவு விரைவாக எனக்கு விடுதலை கிடைக்கப் போகிறதே!'' என்று கூறி ஆனந்த நடனம் ஆடினான். அப்பொழுது அசரீரியாக ஒரு வாக்கு கேட்கப்பட்டது. ''மகனே! இப்பொழுதே உனக்கு விடுதலையளிக்கிறேன்'', அவனது பொறுமைக்கும் விடாமுயற்சிக்கும் உடனே வெகுமதி கிட்டியது. அதைரியப்படாமல் இன்னும் கணக்கற்றப் பிறவிகளிலும் முக்தி பெறுவதற்கு முயற்சி செய்ய அவன் சித்தமாய் இருந்ததுதான் அதற்குக் காரணம். ஆனால் முதலில் கூறப்பட்டவரோ விடுதலை பெற நான்கு பிறவிகள்கூட மிக நீண்ட காலம் என்று கருதினார். எவ்வளவு நாட்கள் வேண்டினும் காத்திருக்கத் தயாராய் இருந்த மனிதனிடம் இருந்தது போன்ற பொறுமையும், விடாமுயற்சியும் பெரும் பேற்றை அளிக்கும்.

## 4. உயர்ந்தது எது? இல்லறமா, துறவறமா?

கடவுளை அடைவதற்காக உலகத்தைத் துறந்து செல்கின்ற ஒருவன், உலகத்தில் வாழ்ந்து உலகின் நன்மைக்காகச் செயல் புரிந்து கொண்டிருக்கும் மனிதர்களை யெல்லாம், கடவுளை வணங்காதவர்கள் என்று நினைக்கக் கூடாது. அது போலவே குடும்பத்தில் மனைவி மக்களோடு வாழும் இல்லறத்தான் உலகைத் துறந்து வாழும் சந்நியாசிகளை மிக இழிவான நாடோடிகள் என்றும், சோம்பேறிகள் என்றும் கருதக் கூடாது. ஒவ்வொருவரும் அவரவர்களுடைய இடத்தில் மேன்மையானவர்களே. இந்தக் கருத்து ஒரு கதைமூலம் விளக்கப் படுகிறது.

ஓர் அரசன் நாட்டிற்கு வரும் துறவிகளையெல்லாம், ''உலகத்தில் யார் உயர்ந்தவன்? உலகைத் துறந்து சந்நியாசியாகி விட்டவனா? அல்லது மணம் செய்து கொண்டு உலகக் கடமைகளைச் செய்து வாழும் இல்லறத்தானா?'' என்று கேட்பது வழக்கம். பலர் அரசனுடைய சந்தேகத்தைத் தீர்க்க அவனிடம் வந்தார்கள். அவர்களில் சிலர், ''துறவிகளே உலகில் சிறந்தவர்கள்'' என்று கூறினார்கள். அரசன் அதைச் சரியான காரணங்கள் மூலம் நிரூபிக்கச் சொன்னான். அவர்களால் நிரூபிக்க முடியாமல் போகவே அவர்களைத் திருமணம் செய்து கொண்டு இல்லறத்தார்களாக வாழும்படி கட்டளை இட்டான். அதன் பிறகு சிலர் வந்து 'இல்லறவாசியே உலகத்தில் மகத்தானவன்' என்று கூறினார்கள். அதையும் அரசன் சரியான காரணத்தோடு நிரூபிக்கச் சொன்

னான். அதையும் அந்தச் சந்நியாசிகள் நிரூபிக்காத போது அவர்களையும் திருமணம் செய்துக் கொண்டு வாழும்படி கட்டளை இட்டான்.

கடைசியாக ஒரு நாள் இளம் சந்நியாசி ஒருவர் அரசனிடம் வந்தார். அவரிடமும் அரசன் தன்னுடைய கேள்வியைக் கேட்டான். அதற்கு அந்தச் சந்நியாசி, ‘ஓ அரசனே! தன்னுடைய இடத்தில் இருக்கும்போது ஒவ்வொருவனும் பெரியவன் தான்’’ என்று கூறினான். அரசன், ‘அதை நிரூபித்துக் காட்டு’ என்றான். உடனே சந்நியாசி, ‘‘உனக்கு நான் அதை நிரூபிக்கிறேன் ஆனால் நீ ஒன்று செய்ய வேண்டும். சில நாட்கள் என்னுடன் வந்து நான் வாழ்வது போல என்னுடனே வாழ வேண்டும்’’ என்றான். அரசன் அதனை ஏற்றுக் கொண்டு சந்நியாசியோடு புறப்பட்டான். இருவரும் அந்த நாட்டைக் கடந்து, மேலும் பல நாடுகளைக் கடந்து, ஒரு பெரிய நாட்டை அடைந்தார்கள். அப்போது அந்நாட்டின் தலைநகரில் ஒரு பெரிய விழா நடந்து கொண்டிருந்தது. துறவியும் அரசனும் எங்கு பார்த்தாலும் வாத்திய ஓசையும், பாட்டும் ஆரவாரமும் ஒலிப்பதைக் கேட்டார்கள். மக்கள் கண்ணைப் பறிக்கும் ஆடைகளோடு தெருக்களில் கூட்டங்கூட்டமாகக் கூடியிருந்தார்கள். அவர்கள் முன்னால் அரசனின் காவலன் அறிவிப்பு ஒன்றை உரக்கப் படித்துக் கொண்டிருந்தான். அது சுயம்வர அறிவிப்பு. அந்த நாட்டு அரசனின் மகள் தன் கணவனை அன்று அந்த நாட்டில் வந்து கூடியிருந்த அரசர்களிலிருந்து தேர்ந்தெடுத்துக் கொள்ளப் போகிறாள். அதை அவன் அறிவித்துக் கொண்டிருந்தான்.



இதைக் கேட்டதும் அரசனும் சந்நியாசியும் அந்த சுயம்வர மண்டபத்திற்குச் சென்றார்கள். அங்கு சுயம்வரத்திற்கு வந்த அரசன் மகள் உலகிலேயே மிகுந்த அழகு வாய்ந்தவளாக இருந்தாள். அவள் அரசனுக்கு ஒரே மகளானதால் அவளை மணந்து கொள்பவன், அவளுடைய தந்தைக்குப் பிறகு அந்த நாட்டின் அரசனாகவும் வருவான். அந்த இளவரசி மிகவும் அழகு வாய்ந்த கம்பீரமான ஓர் இளவரசனை மணந்து கொள்ள விரும்பினாள். இதற்கு முன்பும் அவள் கணவனைத் தேர்ந்தெடுக்கும் இப்படிப்பட்ட சுயம்வரக் கூட்டம் பல நடந்தன. அவளது மனத்திற்குப் பிடித்தவர்கள் அதில் யாரும் இல்லாததால் அவை பயனில்லாமல் போயின. இப்போது கூடியிருக்கும் இந்தக் கூட்டம், முன் எல்லாவற்றைக் காட்டிலும் மிகச் சிறந்ததாகவும் மிகவும் பெரியதாகவும் இருந்தது. இந்தக் கூட்டத்தில் இளவரசி எப்படியும் தன் கணவனைத் தேர்ந்தெடுத்துவிட வேண்டுமென்று எல்லோரும் விரும்பினார்கள்.

ஆனால் வந்தவர்களில் யாருமே இளவரசிக்குப் பிடித்தவர்களாக இல்லை. ஒவ்வொருவராகப் பார்த்து எல்லோரையுமே ஒதுக்கியபடியே அவள் வந்து கொண்டிருந்தாள். இதைப் பார்த்து எல்லோரும் ஏமாற்றமடைந்தார்கள். ‘‘இந்த முறையும் இவளுடைய திருமணம் நடக்காதோ’’ என்று அமைச்சர் முதலானவர்கள் கவலைப்பட்டார்கள். அப்போது அந்த மண்டபத்திற்குள் இளம் சந்நியாசி ஒருவன் நுழைந்தான். கம்பீரமும் அழகும் நிறைந்தவனான அவன் அங்கே வந்தது ஒளி வீசும் சூரியனே வானத்தை விட்டு அங்கே வந்தது போல்

இருந்தது. அந்த மண்டபத்தின் ஒரு மூலையில் நின்று கொண்டு அங்கே என்ன நடக்கிறது என்று அவன் கவனித்துக் கொண்டிருந்தான். அவன் நிற்பதைப் பார்த்து விட்ட இளவரசி அவன் அழகிலும் கம்பீரத்திலும் தன்னை மறந்தாள். அவனது அருகே சென்று கையிலிருந்த மாலையை அவன் கழுத்தில் சூட்டினாள். அந்தச் சந்நியாசி அதிர்ச்சி அடைந்தவனாக மாலையைக் கழற்றிக் கீழே எறிந்து, 'என்ன முட்டாள் தனம் இது? நான் ஒரு சந்நியாசி! எனக்கென்ன திருமணம்?' என்றான். இதைக் கண்ட அந்த நாட்டு அரசன் இந்த சந்நியாசி பிச்சைக்காரனாக இருப்பதால் நாட்டிற்கே சொந்தக்காரியான இளவரசியை மணந்து கொள்ளப் பயப்படுகிறான் என்று நினைத்து, ''என் மகளை மணந்து கொண்டதும் இந்த நாட்டில் பாதி உனக்கு இப்போதே சொந்தம். நான் இறந்த பிறகு முழு நாடும் உனக்குச் சொந்தமாகும்'' என்று கூறி அந்த மாலையை எடுத்து மறுபடியும் அந்தச் சந்நியாசியின் கழுத்தில் போட்டான். இதைக் கண்ட அந்த சந்நியாசி மாலையைத் தன் கழுத்திலிருந்து எடுத்துக் கீழே வீசியெறிந்து, 'அறிவில்லாத்தனம்! எனக்குத் திருமணமே தேவை இல்லை' என்று கூறிவிட்டுச் சட்டென்று அந்த மண்டபத்திலிருந்து வெளியேறி வேகமாக நடக்கத் துவங்கினான்.

இதற்குள் இளவரசி அந்தச் சந்நியாசியின் மீது அளவற்ற காதல் கொண்டு விட்டாள். அவன் போன உடனே, 'ஒன்று நான் அவரை மணந்து கொள்ள வேண்டும் அல்லது உயிரை விட வேண்டும்' என்று கூறியபடியே அவனைத் திரும்ப அழைத்து வருவதற்காக அவன் பின்னாலேயே சென்றாள். இதை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த நம் சந்நியாசி தன்னுடன் இருந்த அரசனைப் பார்த்து, 'அரசனே! நாம் அந்த இரண்டு பேரையும் தொடர்ந்து செல்வோம்' என்று கூறியபடி இளவரசியின் பின்னே புறப்பட்டான். இரண்டு பேரும் இளவரசி தங்களைப் பார்த்து விடாதபடி கொஞ்ச தூரத்திலேயே பின்னால் நடந்து சென்றார்கள்.



இளவரசியைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று கூறிவிட்டுச் சென்ற சந்நியாசி, தலைநகரை விட்டு பல மைல் தொலைவு நடந்து போய் விட்டான். ஒரு காட்டின் அருகே வந்ததும் அதற்குள் நுழைந்து விட்டான். அவனைப் பின் தொடர்ந்து நடந்து வந்த இளவரசியும் காட்டிற்குள் நுழைந்து விட்டாள். பின்னால் வந்த சந்நியாசியும் அரசனும் காட்டிற்குள் நுழைந்தார்கள். முதலில் காட்டிற்குள் நுழைந்த சந்நியாசிக்குக் காடு மிகவும் பழக்கப்பட்டு இருந்ததால், ஏதோ ஒரு வழியில் நுழைந்து யார் கண்ணிலும் படாமல் மறைந்து விட்டான். இளவரசியால் அவனைக் கண்டு பிடிக்க முடியவில்லை. காடு முழுவதும் அலைந்து திரிந்து அவனைக் கண்டு பிடிக்க முடியாமல் மிகவும் களைப்பும் ஏமாற்றமும் அடைந்தவளாய், ஒரு மரத்தடியில் உட்கார்ந்து 'ஓ' என்று அழ ஆரம்பித்து விட்டாள். அப்போது நம்முடைய சந்நியாசியும் அரசனும் அவளிடம் வந்து அழ வேண்டாம் என்றும், தாங்கள் அவளுக்கு வழி காண்பிப்பதாகவும், இப்போது இரவு வந்து விட்டதால் அந்த மரத்தடியிலேயே தங்கி மறுநாள் காலையில் போகலாம் என்றும் கூறினார்கள்.

அப்போது அந்த மரத்தில் ஒரு குருவியும்

அதன் மனைவியும் மூன்று குஞ்சுகளோடு வாழ்ந்து வந்தன. இந்தச் சின்னஞ் சிறு குருவி தன் மரத்திற்குக் கீழே வந்து தங்கியுள்ள மூன்று பேர்களையும் பார்த்தது. உடனே தன் மனைவியிடம், 'என் அன்பிற்குரியவளே! இப்போது நாம் என்ன செய்வோம்? நம் வீடாகிய இந்த மரத்தடியில் சில விருந்தாளிகள் வந்திருக்கிறார்கள் இதுவோ குளிர் காலம். அவர்கள் குளிர்காயக் கூட நெருப்பு இல்லை என்று கூறிவிட்டு, அங்கிருந்து எங்கோ பறந்து சென்று, எரிந்து கொண்டிருந்த ஒரு நெருப்புச் சுள்ளியைக் கொண்டு வந்து, அந்த மூன்று பேருக்கும் முன்னால் போட்டது. அவர்கள் அதைக் கொண்டு அங்கிருந்த சருகுகளை யெல்லாம் சேர்த்துப் பெரும் தீயை எழுப்பிக் குளிர் காய்ந்தார்கள்.

இதைக் கண்ட பிறகும் குருவிக்கு மன நிறைவு ஏற்படவில்லை. தன் மனைவியைப் பார்த்து, 'என் அன்பே! இப்பொழுது நாம் என்ன செய்வோம்? அவர்கள் பசியோடு இருக்கின்றார்கள். பசிதீர நம்மால் எதுவும் கொடுக்க முடியவில்லையே. நாமோ இல்லறவாசிகள். நம் வீடு தேடி வருபவர்களுக்கு பசியைத் தீர்ப்பது நம்முடைய கடமை. அதனால் என்னால் முடிந்ததை நான் செய்ய வேண்டும். என் உடம்பை அவர்களுக்கு உணவாகத் தருகிறேன்'. என்று கூறியபடி அவர்கள் வளர்த்திருந்த நெருப்பில் பாய்ந்து வீழ்ந்து பொசுங்கியது. மரத்தடியில் இருந்த மூவரும் அந்த ஆண் குருவி நெருப்பில் விழுவதைப் பார்த்தார்கள். தங்களால் முடிந்தவரைத் தடுக்கப் பார்த்தார்கள். ஆனால் பறவை மிக வேகமாக நெருப்பில் விழுந்து விட்டது.

அந்தச் சிறிய பறவையின் மனைவி தன் கணவனை ஆண் பறவை செய்ததைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தது. பிறகு தனக்குள், ''இங்கே மூன்று பேர் இருக்கிறார்கள். ஒரு சிறிய பறவையின் உடல் எப்படி அவர்களது பசியைத் தீர்க்கும்? என் கணவரின் உடல் அவர்களுக்குப் போதுமான உணவு ஆகாது. அத்துடன் என் கணவரின் விருப்பம் அந்த மூன்று பேரின் பசியைத் தீர்க்க வேண்டும் என்பதுதான். கணவரின் விருப்பத்தை நிறைவேற்றுவதைத் தவிர மனைவிக்கு வேறு என்ன பெரிய கடமை இருக்கிறது?'' என்று கூறியபடி தானும் தீயில் வீழ்ந்து இறந்தது.



மூன்று குஞ்சுகளும் தங்கள் தந்தையும் தாயும் செய்ததைக் கண்டன. இரண்டு பேர் இறந்த பிறகும் தங்கள் விருந்தினர்களுக்குப் போதுமான உணவு இல்லாததைக் கண்ட அவை தங்களுக்குள், 'நம் பெற்றோர்கள் தங்களால் முடிந்ததைச் செய்தார்கள். அப்படியும் நம் விருந்தினர்களுக்குத் தேவையான உணவு கிடைக்கவில்லை. பெற்றோர்களின் ஆசையைப் பூர்த்தி செய்வது பிள்ளைகளாகிய நம் கடமை. நம்முடைய உயிரும் போகட்டும்'' என்று பேசியபடியே வேகமாக மூன்றும் அந்த நெருப்பில் வீழ்ந்து இறந்தன. அந்த மூன்று பேருமே தங்கள் முன் நடந்ததைக் கண்டு அளவற்ற வியப்பும் அதிர்ச்சியும் அடைந்தார்கள். அந்தப் பறவைகளின் உன்னதமான குணத்தை நினைத்தபடியே இரவைக் கழித்தார்கள். பொழுது விடிந்ததும் இளவரசியைக் காட்டிலிருந்து வழி காட்டி அழைத்து வந்து வெளியே விட்டார்கள். அவள் தன் தந்தையிடம் புறப்பட்டுச் சென்றாள்.

பிறகு சந்நியாசி அரசனிடம், 'அரசனே! ஒவ்

வொருவரும் தான் இருக்கும் இடத்தில் இருந்தால், அவர்களே உயர்ந்தவர்கள் என்று சொன்னேன். இந்த உண்மையைத் தெரிந்து கொண்டாயல்லவா? நீ இந்த உலகத்தில் இல்லறத்தனுக வாழ வேண்டும் என்ருல் இந்தப் பறவைகளைப் போல் எந்த விநாடியும் பிறருக்காக உன்னைத் தியாகம் செய்வதற்குத் தயாராக வாழ வேண்டும். அப்படியில்லாமல் சந்நியாசியாக விரும்பினுல் மிக அழகான பெண்ணையும், பேராசையும் தூசாக மதிக்கின்ற இந்தச் சந்நியாசி போல் இருக்க வேண்டும். நீ இல்லறத்தானுக விரும்பினுல் உன் வாழ்வை மற்றவர்களுடைய நன்மைக்காகப் பலியாக ஆக்கிக் கொள். சந்நியாசியாக வாழ விரும்பினுல் அழகான பெண், பணம், அதிகாரம் இவற்றைக் கண்ணெடுத்தும் பார்க்காதே. தத்தம் நிலையில் தாம் பெரியவரே. ஆனுல் ஒவ்வொருவரது கடமைகளும் வெவ்வேருனவையே'.

## 5. உண்மைத் தியாகம்

குருக்ஷேத்திரப் போரில் வெற்றிக்குப் பிறகு, பாண்டவர்கள் மிகப் பெரிய யாகத்தை நடத்திஞர்கள். அதில் ஏழைகளுக்கு மிகுந்த அளவில் தானம் செய்தார்கள். எல்லா மக்களுமே அந்த யாகத்தின் சிறப்பையும், பெருமையையும் கண்டு அதிசயித்தார்கள். அப்போது செய்யப் பட்டதைப்போல் உலகில் எப்போதுமே செய்யப்பட்டதில்லை என்று நினைத்தார்கள். யாகம் சிறப்பாக நடந்து முடிந்ததும் அந்த இடத்திற்கு ஒரு கீரிப்பிள்ளை வந்தது. அதனுடைய உடம்பில் ஒரு பகுதி தங்கமயமாக ஒளி வீசியது. உள்ளே நுழைந்த அது, யாகம் செய்யப் பட்ட மண்டபம் முழுவதும் விழுந்து, விழுந்து புரண்டது. மண்டபம் முழுவதும் புரண்ட பிறகு, அங்குக் கூடியிருந்த தருமர் முதலானவர்களிடம் வந்து, 'நீங்கள் எல்லோரும் பொய்யர்கள், நீங்கள் செய்த இந்த யாகமும் பொய்யானது' என்று கூறியது. இதைக் கேட்டவர்கள் ஆச்சரியத்தோடு, 'நீ என்ன சொல்கிருய்? இந்த யாகத்தில் எவ்வளவு பொன்னும், பொருளும், நகையும் ஏழைகளுக்கு அள்ளிக் கொடுத்தார்கள் என்பது உனக்கு தெரியாது. அப்போது செய்த தானத்தால் நாட்டில் இப்போது ஏழை என்று ஒருவருமே இல்லை. எல்லாரும் செல்வர்களாக ஆனந்தமாக இருக்கின்ருர்கள். இதுவரை உலகத்தில் செய்த மிக அற்புதமான யாகம் இது போன்று வேறில்லை' என்று கூறிஞர்கள்.

ஆனுல் கீரி அவர்கள் வார்த்தையை மறுத்துப்

பேசத் துவங்கியது: ''சின்னஞ் சிறு கிராமம் ஒன்றில் பல நாட்களுக்கு முன்பு பிராமணர் ஒருவர் தன் மனைவி, மகன், மருமகளோடு வாழ்ந்து வந்தார் அவர்கள் மிகவும் ஏழைகள். பிறருக்குப் படிப்பும் சாஸ்திரமும் சொல்லித் தந்து அதனால் கிடைக்கும் மிகக் குறைந்த பொருளைக் கொண்டு, அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அப்போது மிகவும் கடுமையான ஒரு பஞ்சம் ஏற்பட்டது. அந்தப் பஞ்சத்தால் எல்லோரையும் விட அந்த ஏழை பிராமணக் குடும்பந்தான் மிகவும் துன்பப்பட்டது. ஒரு முறை பல நாட்களாக அவர்கள் பட்டினி கிடந்த போது, எங்கோ வெளியே சென்று அலைந்து, அந்தப் பிராமணர் கொஞ்சம் கோதுமை மாவைக் கொண்டு வந்தார். அதை நான்காகப் பங்கிட்டுக் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் உண்ணத் துவங்கினர். அந்த வேளையில் அவர்களின் வீட்டுக் கதவு தட்டப் பட்டது. பிராமணர் கதவைத் திறந்தார். எதிரே சான்றோர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். இந்தியாவில் விருந்தினரைத் தெய்வமாக மதிப்பார்கள். எனவே விருந்தாளியைப் பார்த்ததும் ஏழை பிராமணர் மிகுந்த அன்போடு வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று, தன் பங்கு உணவை அந்த விருந்தாளிக்குக் கொடுத்துச் சாப்பிடும்படி உபசரித்தார். அந்த விருந்தாளி, உடனே மாவு முழுவதையும் சாப்பிட்டு விட்டார். பிறகு பிராமணரைப் பார்த்து, ''ஐயோ நீங்கள் என்னைக் கொலை செய்கிறீர்கள். கடந்த பத்து நாட்களாக நான் சாப்பிடாமல் பட்டினியாக இருக்கிறேன். நீங்கள் கொடுத்த இந்த மிகச் சிறிய மாவு எனக்கு அளவில்லாத பசியைத் தூண்டி என்னை வாட்டுகிறது'' என்று



கதறினார். இதைக் கேட்ட அந்தப் பிராமணரின் மனைவி கணவரைப் பார்த்து தன் பங்கையும் அவருக்குக் கொடுத்து விடும்படி கூறினாள். மனைவியின் பசியையும், அவள் இருக்கும் நிலையையும் கண்ட பிராமணர் வேண்டாம் என்று கூறினார். ஆனால், ''இங்கே விருந்தாளியாக நம் வீட்டிற்கு வந்த விருந்தினர் பசியால் துடிக்கிறார். இல்லறத்தார்களாகிய நம் கடமை நம் வீட்டிற்கு வந்த விருந்தினரின் பசியைப் போக்கி உபசரிப்பதாகும். கணவராகிய உங்களிடம் அவருக்குத் தர ஒன்றும் இல்லாத போது, என்னிடம் இருப்பதைக் கொடுக்க வேண்டியது மனைவியாகிய என் கடமையாகும்'' என்று கூறித் தன் பங்கையும் அந்த விருந்தாளிக்குக் கொடுத்தாள். அதை உண்ட பிறகும் விருந்தாளியின் பசி தீரவில்லை. அவர் துடித்தார். இதைப் பார்த்த அந்த பிராமணரின் மகன், ''என் தந்தை தன்னுடைய கடமையை நிறைவேற்ற உதவி செய்ய வேண்டியது மகனின் கடமை. எனவே என் பங்கு உணவையும் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று தன் பங்கையும் அந்த விருந்தாளியிடம் கொடுத்தான். அதை உண்ட பிறகும் விருந்தாளியின் பசி தீரவில்லை. மிகுந்த வேதனைப்பட்டார். இதைச் கண்ட அந்த மகனுடைய மனைவி தன்னுடைய பங்கையும் அந்த விருந்தாளிக்கு கொடுத்தாள். அதை உண்டதும் பசி தீர்ந்தவராக அந்த விருந்தாளி மகிழ்ச்சியோடு, அவர்களை வாழ்த்தி விட்டுச் சென்றார்.

அன்று இரவு பசியின் கொடுமையால் அந்த நான்கு பேரும் இறந்து போனார்கள். அவர்கள் தங்கள் உணவை அந்த விருந்தாளிக்குக் கொடுத்த போது, அதில் கொஞ்சம் அங்கே தரையில் சிந்தி

விட்டிருந்தது. நான் அங்கே சென்று அந்த மாவின் மீது புரண்டதும், இதோ நீங்கள் பார்க்கின்ற என் பாதி உடம்பு தங்க மயமாக ஆகிவிட்டது. அன்றிலிருந்து நான் அது போன்று தானம் செய்பவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று மிகப் பெரிய யாகம் செய்யும் இடங்களுக்கெல்லாம் சென்று, புரண்டு பார்க்கிறேன். இதுவரையும் எங்கும் என் மீதி உடல் பொன்மயமாகவில்லை. இங்கும் அது மாதிரிதான் வந்து புரண்டு பார்த்தேன். இங்கும் என் உடல் தங்கமாகவில்லை. அதனால்தான் இது யாகமே இல்லை என்று சொல்கிறேன்' என்று கூறியது. முழுமையான தன்னல மறுப்பின் நிலையையும், அதன் உயர்வையும் இக் கதை விளக்குகிறது.

## 6. நாயின் சுருண்ட வால்

ஏழை ஒருவன் இருந்தான். அவனுக்கு பணம் சேர்க்க வேண்டும் என்னும் ஆசை ஏற்பட்டது. ஒரு பூதத்தை வசமாக்கிக் கொண்டால் அது பணத்தை மட்டுமல்ல, ஒருவன் விரும்பும் எல்லாவற்றையும் கொண்டு வரும் என்பதை அவன் கேள்விப்பட்டான். உடனே அவன் தனக்கு ஒரு பூதத்தைப் பிடித்துத் தருகின்றவரைத் தேடத் தொடங்கினான். கடைசியாக மிகுந்த சக்தி வாய்ந்த முனிவர் ஒருவரிடம் அவன் போய்ச்சேர்ந்தான். அவரிடம், 'நான் சொன்ன வேலைகளை யெல்லாம் செய்வதற்காக, எனக்கு ஒரு பூதம் வேண்டும். அதைப் பிடிப்பது எப்படி?'' என்று மிகவும் வேண்டினான். அதைக் கேட்ட முனிவர், 'வீணாக அலையாமல் வீட்டிற்குப் போ' என்று அறிவுரை கூறி அனுப்பினார். ஆனால் மறுநாளே அந்த மனிதன் அவரிடம் வந்து, 'எனக்கு ஒரு பூதத்தைக் கொடுங்கள்! எனக்குக் கண்டிப்பாகப் பூதம் வேண்டும்! என்று நாள் முழுதும் அழுது வேண்டியபடியே இருந்தான். முனிவர் எரிச்சலடைந்தவராய் ஒரு மந்திரத்தை உபதேசித்து, 'இதோ இந்த மந்திரத்தை நினைவில் வைத்துக் கொள். இரவும் பகலும் இதை ஜபம் செய்தபடியே இரு. ஒரு பூதம் உன் முன் வரும். நீ என்ன சொல்கிறாயோ, அந்த வேலைகளை யெல்லாம் அது செய்யும். ஆனால் ஒன்று, நீ எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பூதங்கள் பயங்கரமானவை. நீ எப்போதும் அதற்கு வேலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்படி

வேலை கொடுக்கத் தவறினால், உன் உயிரையே அது வாங்கி விடும்' என்றார். அந்த மனிதன், 'நான் எப்பொழுதும் வேலை கொடுத்துக் கொண்டே இருப்பேன். அது மிகவும் சுலபமானது' என்று சொல்லி விட்டு அங்கிருந்து புறப்பட்டான். காட்டிற்குள் சென்று அமர்ந்து, முனிவர் சொன்ன மந்திரத்தை ஜபம் செய்ய ஆரம்பித்தான். நெடுநேரத்திற்குப் பிறகு, ஒரு பயங்கரமான உருவம் ஒன்று அவன் முன் தோன்றி, 'நான் ஒரு பூதம். நீ உச்சரித்த மந்திரத்திற்குக் கட்டுப் பட்டு நீ கூறும் வேலைகளைச் செய்ய வந்திருக்கிறேன். ஆனால் நீ எப்போதும் எனக்கு வேலை தந்து கொண்டே இருக்க வேண்டும். இல்லையென்றால் அடுத்த விநாடியே உன்னைக் கொன்று விடுவேன்' என்று கூறியது.

உடனே அந்த மனிதன், 'எனக்கு ஒரு பெரிய மாளிகையைக் கட்டு' என்றான். அடுத்த விநாடியே பூதம் ஒரு பெரிய மாளிகையைக் கட்டிவிட்டது. 'பணம் கொண்டு வா' என்றான். பணத்தைக் கொண்டு வந்து கொட்டியது. 'இந்தக் காடு முழுவதையும் அழித்து, அங்கே ஒரு நகரத்தை உருவாக்கு' என்றான். அடுத்த விநாடியே காடு அழிந்து நகரம் உருவாகியது. அந்த மனிதனுக்கு ஆச்சரியம் தாளவில்லை. 'இன்னும் ஏதாவது வேலை இருக்கிறதா' என்று அது உறுமியது. இப்போதுதான் அவனுக்குப் பூதத்தின் உண்மையான இயல்பு தெரிந்தது. அவனைப் பயம் பிடித்துக் கொண்டது. இனி மேல் இந்த பூதத்திற்கு என்னால் எந்த வேலையைக் கொடுக்க முடியும்? எதைக் கொடுத்தாலும் ஒரு விநாடியில் செய்து விடுகிறதே' என்று நினைத்தான். அதற்குள் அந்த பூதம், 'வேலை கொடுக்கிறாயா? இல்லை உன்னை விழுங்கிவிடட்டுமா?' என்று கத்தியது. அந்தப் பரிதாபகரமான மனிதனால் எந்த வேலையும் கொடுக்க முடியவில்லை. அஞ்சி நடுங்கினான். உடனே ஒரே ஓட்டமாக முனிவர் இருந்த இடத்திற்கு ஓடினான். அவர் காலில் விழுந்து விஷயத்தைச் சொல்லிக் காப்பாற்றும்படிக் கெஞ்சினான். அதற்குள் பூதம் அங்கேயே வந்து விட்டது. அவனைத் தின்று விடுவதாக கூச்சல் போட்டது. அந்த மனிதனோ நடுநடுங்கி, முனிவரின் கால்களைப் பிடித்துக் கொண்டு அலறினான். முனிவர் அவனிடம் எதிரில் நின்று கொண்டிருந்த நாயைக் காட்டி, அருகிலிருந்த கத்தியால் வளைந்திருந்த அதன் வாலை வெட்டச் சொன்னார். வெட்டியதும், அதை நிமிர்த்தி நேராக்கும் வேலையைப் பூதத்துக்குத் தரும்படி கூறினார். பூதமும் வளைந்த நாய் வாலைக் கையில் பிடித்துக் கொண்டு நிதானமாகவும், மிக எச்சரிக்கையாகவும் நீட்ட ஆரம்பித்தது. ஆனால் நேராக நிமிர்ந்த அந்த வால், விட்ட மறுவிநாடியே, மறுபடியும் வளைந்து கொண்டது. மறுபடியும் நிதானமாக வாலை நிமிர்த்தியது. விட்ட உடனே மறுபடியும் அது சுருண்டு கொண்டது. மறுபடியும் மிகுந்த சிரமத்துடன் நிதானமாக நிமிர்த்தியது. நிமிர்த்தியதை விட்ட மறு விநாடியே, மீண்டும் அந்த வால் வளைந்து விட்டது. இப்படியே இரவும் பகலுமாக அந்த வாலை வளைத்து வளைத்து, இறுதியில் பூதம் களைத்து விழுந்து விட்டது. பிறகு அது அந்த மனிதனைப் பார்த்து, 'நானோ பூதங்களிலேயே திறமை வாய்ந்தவன். எந்தக் காலத்திலும் நான் ஒரு வேலையைச் செய்ய முடியாமல் இப்படித் துன்பப் பட்டதில்லை. நான் இப்போது உன்னுடன் ஓர் உடன்

படிக்கை செய்து கொள்கிறேன். என்னை உன்னுடைய மந்திரத்திலிருந்து விட்டு விடு. அதற்குப் பதிலாக நான் இப்போது உனக்குக் கொடுத்த மாளிகை, பணம், நகரம் எல்லாவற்றையும் உன்னோடு விட்டுச் செல்கிறேன். உனக்குத் துன்பமும் தரமாட்டேன்' என்றது. அந்த மனிதன் அளவற்ற மகிழ்ச்சியோடு, பூதத்தின் உடன்பாட்டை ஏற்றுக் கொண்டான்.

இந்த உலகம் நாயின் வளைந்த வால் போல் இருக்கிறது. மக்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அதை நிமிர்த்த வேண்டுமென்று முயன்று வருகிறார்கள். ஆனால் நிமிர்த்தி விட்ட உடனே அது மறுபடியும் சுருண்டு கொள்கிறது. சுருண்டு கொள்ளாமல் அது வேறென்ன செய்யும்? முதலில் பற்றில்லாமல் செயல் புரியத் தெரிந்து கொண்டால்தான் மனிதன் வெறி பிடித்தவனாக மாற மாட்டான். இந்த உலகம் நாயின் வால் என்றும், அதை ஒரு போதும் நிமிர்த்த முடியாது என்றும் தெரிந்து கொண்டால், நாம் வெறியர்களாகமாட்டோம். இத்தகைய வெறி மட்டும் இல்லாதிருந்தால் உலகம் இப்போது இருப்பதை விட மிகவும் மேன்மையுற்றிருக்கும். வெறித்தனம் மனித இனத்தை முன்னேற்றும் என்ற எண்ணம் தவறானதாகும். அதற்குப் பதிலாக இந்த வெறி மக்களிடையே வெறுப்பையும், கோபத்தையும் தூண்டி, ஒருவரோடு ஒருவர் சண்டையிடுமாறு செய்து, அவர்களை இரக்கமில்லாதவர்களாக மாற்றிவிடும்.

# 7. கிணற்றுத் தவளை

**ஒரு** சிறு கதை சொல்லப் போகிறேன். ''நாம் ஒருவரையொருவர் வசை பாடுவதை நிறுத்த வேண்டும்'' என்று இப்பொழுது பேசி முடித்த நாவன்மை படைத்த பேச்சாளர் கூறியதைக் கேட்டீர்கள். நமக்குள் இவ்வளவு மாறுபாடு இருப்பதைப் பற்றி அவர் வருத்தப்பட்டார். இந்த மாறுபாடுகளுக்குக் காரணம் என்ன என்பதை விளக்க, ஒரு கதை சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன்.

தவளை ஒன்று, ஒரு கிணற்றில், பல நாட்களாக வசித்து வந்தது. அந்தக் கிணற்றிலேயே பிறந்து, அங்கேயே வளர்ந்தது அந்தச் சின்னஞ் சிறிய தவளை. அந்தத் தவளை கண்களை இழந்து விட்டதா, இல்லையா என்று சொல்லுவதற்கு நல்ல வேளையாக, அங்கே பரிணாமவாதிகள் யாரும் இல்லை. ஆனால் நம் கதையைப் பொறுத்தவரையில், அதற்குக் கண்கள் இருந்தன என்றே வைத்துக் கொள்வோம். அத்தவளை நாள்தோறும் நீரிலிருந்த புழு பூச்சிகளையும் கிருமிகளையும், வெகு சுறுசுறுப்பாக, அகற்றிச் சுத்தப்படுத்தியது. அந்தச் சுறுசுறுப்பு, நம் தற்காலக் கிருமி ஆராய்ச்சியாளர்களுக்கு இருந்தால் அது அவர்களுக்குப் பெருமை தரும் விஷயமாகும். அவ்வாறே வாழ்ந்ததால் அத்தவளை சிறிது பருத்தும் விட்டது.

ஒரு நாள் கடலில் வாழ்ந்து வந்த தவளையொன்று அங்கு வந்து, அந்தக் கிணற்றில் விழுந்து விட்டது.

''நீ எங்கிருந்து வந்திருக்கிறாய்?''

''கடலிலிருந்து''

''கடலா? அது எவ்வளவு பெரியது? எனது

கிணற்றளவு பெரியதாயிருக்குமா?'' என்று கூறி, ஒரு பக்கத்திலிருந்து, எதிர்பக்கத்திற்குத் தாவிக் குதித்தது கிணற்றுத் தவளை.

''நண்பா இந்தச் சின்னக் கிணற்றோடு எப்படிக் கடலை ஒப்பிட முடியும்?'' என்று கேட்டது கடல் தவளை

கிணற்றுத் தவளை மறுபடியும் ஒரு தாண்டு தாண்டி, ''நீ சொல்லும் கடல் இவ்வளவு பெரிய தாயிருக்குமோ? என்று கேட்டது.

''சேச்சே! என்ன முட்டாள் தனம்! கடலை உன் கிணற்றோடு ஒப்பிடுவதா?''

''சரி, சரி, என் கிணற்றை விட எதுவும் பெரிய தாக இருக்க முடியாது. கண்டிப்பாக, இதைவிடப் பெரியதாக இருக்கவே முடியாது. இவன் சொல்வது அப்பட்டமான பொய்; இவனை வெளியே விரட்ட வேண்டும்!'' என்று நினைத்தது அந்தக் கிணற்றுத் தவளை.

இத்தனை காலமாக இருந்துள்ள கஷ்டம் இது தான். நான் ஓர் இந்து. நான் என் சிறிய கிணற்றுக்குள் இருந்து கொண்டு, உலகம் முழுவதும் என் சிறு கிணறு தான் என்று நினைக்கிறேன். கிறிஸ்தவன் தன் சமயமாகிய சிறு கிணற்றுக்குள் உட்கார்ந்து கொண்டு, உலகம் முழுவதும் தன் கிணறுதான் என்று நினைக்கிறான். அவ்வாறே முகமதியனும் தன் சமயமாகிய சிறு கிணற்றில் உட்கார்ந்து கொண்டு, அதுதான் முழு உலகம் என்று நினைக்கிறான். நம்முடைய இச் சிறிய உலகின் வேலிகளைத் தகர்த்தெறிய, அமெரிக்கர்களாகிய நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் பெரிய முயற்சிக்காக நான் உங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். வருங்காலத்தில், உங்கள் விருப்பம் நிறைவேற இறைவன் அருள் புரிவான் என்று நம்புகிறேன்.

## 8. கடமையே தெய்வம்

**நாம்** உயர்ந்து கொண்டே போவதற்குரிய ஒரே வழி நமக்கு அருகில் இருக்கும் கடமைகளை நாம் செய்து கொண்டே போவதாகும். அப்படிச் செய்வதன் மூலம் வலிமையைப் பெருக்கிக் கொண்டே சென்று, இறுதியில் மிக உயர்ந்த நிலையை அடைந்து விடலாம். ஓர் இளம் சந்நியாசி காட்டிற்குச் சென்றார். அங்கு தியானம், பூஜை முதலியவைகளைச் செய்தபடி நெடுங்காலம் யோகத்தில் இருந்தார். பல ஆண்டுகளின் கடினமான தவத்திற்குப் பிறகு, அவர் ஓய்வாக மரத்தடியில் ஒரு நாள் உட்கார்ந்துக் கொண்டிருந்தார், அப்போது அவரது தலை மீது காய்ந்த சில சருகுகள் விழுந்தன. நிமிர்ந்து பார்த்தபோது அவரது தலைக்கு மேல் மரக்கிளையில் ஒரு காகமும் கொக்கும் சண்டையிட்டுக் கொண்டிருந்தன. அதனால் கிளையிலிருந்து, சருகுகள் உதிர்ந்து அவரது மேல் விழுந்தன. இதைக் கண்டு அளவற்ற கோபம் அடைந்த அவர், 'என்ன! எவ்வளவு தைரியம் இருந்தால் என் தலை மீது சருகுகளை உதிர்ப்பீர்கள்' என்று கூறியபடியே அந்தப் பறவைகள் இரண்டையும் கோபத்துடன் பார்த்தார். யோக சக்தியால் அவரது தலையிலிருந்து ஒரு நெருப்பு மேலெழுந்து சென்று, அந்தப் பறவைகளை எரித்துச் சாம்பலாக்கியது. அதைக் கண்டதும் அவர் மகிழ்ச்சி அடைந்தார். ஒரு பார்வையிலேயே பறவைகளை எரித்து விடும் தன்னுடைய ஆற்றலைக் கண்டு, தலைகால் புரியாத மகிழ்ச்சி அவருக்கு ஏற்பட்டது.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு வழக்கம் போல் தன்னுடைய உணவிற்காக அருகில் உள்ள ஊருக்குச் சென்று ஒரு வீட்டின் முன் நின்று, 'தாயே, பிச்சை இடுங்கள்' என்ருர். 'மகனே! கொஞ்சம் இரு' என்று குரல் வீட்டிற்குள் இலிருந்து வந்தது. இதைக் கேட்ட அந்த சந்நியாசி, 'ஓ, பரிதாபத்திற்குரிய பெண்ணே! என்னைக் காக்க வைப்பதற்கு உனக்கு எவ்வளவு தைரியம்? என்னுடைய சக்தியை நீ அறியவில்லை' என்று நினைத்தார். இப்படி அவர் நினைத்துக் கொண்டிருக்கும்போதே உள்ளிருந்து, 'ஓ சிறுவனே, உன்னைப் பற்றி அதிகமாக நினைத்துக் கொள்ளாதே. இங்கே இருப்பது காக்கையும் அல்ல கொக்கும் அல்ல' என்று குரல் வந்தது. இதைக் கேட்டதும் அந்தச் சந்நியாசி ஆச்சரியப்பட்டார். பிறகு நெடுநேரம் காத்திருந்தார். கடைசியாக அந்தப் பெண்மணி வந்தாள். சந்நியாசி அவளுடைய கால்களில் வீழ்ந்து, 'தாயே! காட்டில் நடந்த நிகழ்ச்சியை நீங்கள் எப்படி அறிந்தீர்கள்' என்று கேட்டார். அதற்கு அவள் 'மகனே! எனக்கு உன்னைப் போல் யோகமோ, தவமோ எதுவும் தெரியாது. அன்ருடம் என் கடமைகளைச் செய்து கொண்டிருக்கிற சாதாரணமான ஒரு பெண் நான். நான் உன்னை இவ்வளவு நேரம் ஏன் காக்க வைத்தேன் என்ருல், என்னுடைய கணவர் மிகவும் நோயுற்று இருக்கிருர். நீ குரல் கொடுத்த போது நான் அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தேன். என் வாழ்நாள் முழுவதும் என்னுடைய கடமைகளை மனப்பூர்வமாகச் செய்து வருபவள் நான். கல்யாணமாகாதிருந்த போது என் பெற்ருேர்களுக்கு என்னுடைய கடமைகளைச் செய்து



வந்தேன். திருமணம் நடந்த பிறகு என் கடமைகளை என் கணவருக்குச் செய்து வருகிறேன். அது தான் நான் செய்து வரும் யோகம். ஆனுல் என் கடமைகளை இப்படி நான் செய்து வரும்போது தெளிவாக எதையும் அறிந்து கொள்ளக் கூடிய ஞானம் எனக்கு ஏற்பட்டுள்ளது. அதன் மூலம் உன்னுடைய எண்ணத்தை நான் புரிந்து கொண்டேன். காட்டில் நடந்ததையும் தெரிந்துக் கொண்டேன். இதற்கு மேலும் இதைப் பற்றி நீ ஏதாவது தெரிந்துக் கொள்ள வேண்டுமென்ருல், இந்தக் கிராமத்தைத் தாண்டி இருக்கும் நகரத்திற்குச்செல். அங்கே வியாதன் என்று ஒருவன் இருக்கிருன். அவன் உனக்குப் பயனுள்ள பலவற்றை போதிப்பான்' என்ருள்.

ஆனுல் முதலில் அந்தச் சந்நியாசி, 'நான் ஏன் அந்த நகரத்திற்கும், வியாதனிடமும் போக வேண்டும்' என்று நினைத்தார். ஆனுல் சற்று முன் நடந்த நிகழ்ச்சியால் அவரது அகங்காரம் சற்று விலகியிருந்தது. எனவே வியாதனைத் தேடிக் கொண்டு நகரத்திற்குச் சென்ருர். நகரத்தின் அருகில் வந்ததுமே கடைத் தெருவில் மிகப் பெரிய உருவம் படைத்த, கொழுத்தவனுக இருந்த வியாதன், தன்னுடைய கசாப்புக் கடையில் அமர்ந்தபடி, ஒரு பெரிய கத்தியால் இறைச்சியை வெட்டியபடியே, எதிரில் நின்று கொண்டிருந்த கூட்டத்திடம் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டார். அந்தக் காட்சியைக் கண்டதும் அந்தச் சந்நியாசி 'அதிர்ச்சியடைந்து, 'கடவுளே! இந்த மனிதனிடமிருந்தா நான் ஞானத்தைக் கற்றுக் கொள்ளப் போகிறேன். அவனைப் பார்த்தால் அசுரனின் அவதாரம் போல் தோன்று

கிறதே' என்று வாய்விட்டுக் கத்தி விட்டார். இதற்கிடையில் வியாதன் சந்நியாசியைக் கவனித்துவிட்டு 'ஓ! சுவாமி! அந்தப் பெண்மணி உங்களை இங்கே அனுப்பினார்களா? அதோ அங்குள்ள இருக்கையில் கொஞ்ச நேரம் அமர்ந்திருங்கள். என் வியாபாரத்தை முடித்து விட்டு வருகிறேன்' என்றான். அந்தச் சந்நியாசி, 'நமக்கு எப்படிப்பட்ட காலம் வந்து நேர்ந்தது!' என்று நினைத்தபடியே வியாதன் காட்டிய இருக்கையில் அமர்ந்திருந்தார். நெடு நேரம் கழிந்தது. வியாதன் இறைச்சி முழுவதையும் விற்று, பணத்தை யெல்லாம் எடுத்துக்கொண்டு சந்நியாசியிடம் வந்து, 'வாருங்கள் என்னுடைய வீட்டிற்குப் போகலாம்' என்றான். வீட்டை அடைந்ததும் வியாதன் சந்நியாசி அமர இருக்கையை அளித்து விட்டு, 'இங்கேயே இருங்கள் வந்து விடுகிறேன்' என்று வீட்டின் உட்பகுதிக்குள் சென்றான். அங்கே வயது முதிர்ந்த தன் தந்தையையும் தாயையும் குளிப்பாட்டி அவர்களுக்கு உணவைத் தந்து சாப்பிடச் செய்தான். பிறகு அவர்கள் மனம் மகிழும்படி பலவகையான சேவைகளைச் செய்து விட்டு, சந்நியாசியிடம் வந்தான். 'ஐயா இப்பொழுது என் கடமைகளை யெல்லாம் முடித்து விட்டேன். நான் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்' என்றான்.

சந்நியாசி அவனிடம் ஆன்மாவைப் பற்றியும், கடவுளைப் பற்றியும் சில கேள்விகளை கேட்டான். வியாதன் அதற்கு ஒரு பெரிய விளக்கமே தந்தான். அந்த விளக்கம் ''வியாத கீதை'' என்ற பெயரில் மகாபாரதத்தில் அமைந்துள்ளது. அந்த வியாத கீதை வேதாந்தத்தின் மிகப் பெரிய தத்துவ விளக்கமாக அமைந்துள்ளது. வியாதன் தன்னுடைய விளக்கத்தைச் சொல்லி முடித்ததும் சந்நியாசி அளவில்லாத ஆச்சரியம் அடைந்தார். வியாதனைப் பார்த்து, ''இவ்வளவு ஞானம் படைத்த நீங்கள் வியாதன் என்ற இந்த மோசமான வடிவத்தில் இருந்துக் கொண்டு, தொழில்களிலேயே மிகவும் இழிவானதும், கேவலமானதுமான கசாப்புத் தொழிலை ஏன் செய்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார். இதைக் கேட்ட வியாதன் சந்நியாசியை நோக்கி, ''மகனே! தொழில்களில் எதுவும் இழிவானதோ, கேவலமானதோ இல்லை. என்னுடைய பிறப்பு கசாப்புத் தொழில் செய்யும் இந்தச் சூழ்நிலையில் என்னைக் கொண்டு வந்து வைத்திருக்கிறது. என்னுடைய இளம் வயதில் பரம்பரைத் தொழிலாக இந்தத் தொழிலை நான் கற்றுக் கொண்டேன். இந்தத் தொழிலில் எனக்குப் பற்றேதும் இல்லை. ஒரு இல்லறத்தானாக பற்றற்று இந்தக் கடமைகளை நான் செய்து கொண்டிருந்தேன். என் பெற்றோர்கள் மகிழ்ச்சி அடைய என்னென்ன சேவைகள் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்கிறேன். அது தவிர உன்னைப் போல் யோகம் பற்றி எனக்கொன்றும் தெரியாது. உன்னைப்போல் நான் ஒரு சந்நியாசியாகவும் ஆகவில்லை. வீட்டைத் துறந்து காட்டிற்குப் போகவில்லை. என்னிடம் நீ கேட்டவையெல்லாம் பற்றில்லாமல், இல்லறத்தான் எனும் என்னுடைய நிலைக்கு ஏற்ற கடமைகளை நான் செய்து வந்ததால் கிடைத்ததாகும்'' என்றான்.

# 9. நாரதரும் மாயையும்

இந்துப் புராணக் கதை ஒன்று இருக்கிறது. ஒரு முறை நாரதர், ஸ்ரீகிருஷ்ணரைப் பார்த்து, ''பகவானே, மாயையை எனக்குக் காண்பியுங்கள்'' என்று கேட்டார். சில நாட்களுக்குப் பிறகு ஸ்ரீகிருஷ்ணர், நாரதரைத் தன்னோடு ஒரு பாலைவனப் பயணத்துக்கு வருமாறு அழைத்தார். பலகாத தூரம் நடந்த பிறகு, ஸ்ரீகிருஷ்ணர் நாரதரைப் பார்த்து, ''நாரதா, எனக்கு மிகவும் தாகமாக இருக்கிறது. சிறிது தண்ணீர் கொண்டுவர முடியுமா?'' என்று கேட்டார்.

''பகவானே, உடனே தண்ணீர் கொண்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு நாரதர் புறப்பட்டார். சிறிது தூரத்தில் ஒரு கிராமம் இருந்தது. அவர் தண்ணீரைத் தேடி அந்தக் கிராமத்துக்குள் சென்று ஒரு வீட்டின் கதவைத் தட்டினார். மிகவும் அழகான இள மங்கை ஒருத்தி கதவைத் திறந்தாள்.

அவளைப் பார்த்த மாத்திரத்தில் நாரதர் தன்னுடைய பிரபு தண்ணீருக்காகக் காத்துக் கொண்டிருப்பதையும், தண்ணீர் கிடைக்காவிட்டால் தாகத்தால் ஒரு வேளை அவர் இறந்துவிடக் கூடிய சூழ்நிலையில் இருப்பதையும் கூட மறந்து விட்டார். எல்லாவற்றையும் மறந்து விட்டு அவர் அந்தப் பெண்ணோடு பேசத் தொடங்கி விட்டார். அன்று முழுவதும் அவர் கிருஷ்ணரிடம் திரும்பிப் போகவில்லை. அடுத்த நாளும் அவர் அந்தப் பெண்ணோடு பேசிக் கொண்டே இருந்தார். அவர்கள் பேச்சு, காதலாக மலர்ந்தது. அந்தப் பெண்ணின் தந்தை



யிடம், அந்தப் பெண்ணைத் தனக்குத் திருமணம் செய்து கொடுக்குமாறு நாரதர் கேட்டார். அவர்கள் திருமணம் செய்து கொண்டு குழந்தைகளையும் பெற்றனர். இவ்வாறு பன்னிரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. நாரதருடைய மாமனார் இறந்துவிட்டார். அவரது சொத்துக்கு நாரதர் வாரிசானார். அவர், தன்னுடைய மனைவி, மக்கள், நிலபுலங்கள், ஆடு, மாடுகள் இவற்றோடு மிகவும் இன்பமான வாழ்க்கை வாழ்வதாக நினைத்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் திடீரென்று பெரிய வெள்ளம் வந்தது. பொங்கிவந்த ஆற்று வெள்ளம் கரையை உடைத்துக் கொண்டு கிராமத்துக்குள் புகுந்தது. வீடுகள் இடிந்து விழுந்தன. மனிதர்களையும் மிருகங்களையும் வெள்ளம் மூழ்கடித்து; இழுத்துச் சென்றது. வெள்ள வேகத்தில் எல்லாம் மிதந்து சென்று கொண்டிருந்தன. நாரதர் தப்பிக்க வேண்டியிருந்தது. மனைவியை ஒரு கையிலும், இரண்டு குழந்தைகளை மற்றொரு கையிலும் பிடித்துக் கொண்டு, தோளில் ஒரு குழந்தையைச் சுமந்து கொண்டு, இந்தப் பயங்கரமான வெள்ளத்தைக் கடக்க நாரதர் முயன்று கொண்டிருந்தார். சில அடிகள் எடுத்து வைத்தவுடனேயே ஆற்றின் வேகம் மிகவும் அதிகமாக இருப்பதை உணர்ந்தார். அவரது தோளின் மீது இருந்த குழந்தை வெள்ளத்தில் விழுந்து அடித்துச் செல்லப்பட்டது. நாரதர் துயரத்தால் கதறினார். அந்தக் குழந்தையைக் காப்பாற்றும் முயற்சியில், கையில் பிடித்திருந்த குழந்தைகளிலும் ஒன்று வெள்ளத்தில் சென்று விட்டது.

கடைசியில், அவர் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்த அவருடைய மனைவியையும்

வெள்ளம் அடித்துச் சென்றது. வெள்ளம் அவரைக் கரையில் ஒதுக்கியது. அவர் துயரத்தால் கதறிக் கொண்டிருந்தார். அப்போது, ''குழந்தாய், தண்ணீர் எங்கே?'' நீ தண்ணீர் எடுத்துவரப் போனாய்; நான் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்; நீ போய் ஒரு நாழிகை ஆகிவிட்டது'' என்று ஒரு மெல்லிய குரல் அவருக்குப் பின்னால் கேட்டது. ''ஒரு நாழிகையா!'' என்று நாரதர் அதிர்ச்சியோடு கேட்டார். பன்னிரண்டு நீண்ட ஆண்டுகள் அவர் மனத்தில் ஓடி மறைந்து விட்டன. ஆனால், இந்த நிகழ்ச்சிகளெல்லாம் ஒரு நாழிகை நேரத்துக்குள் நடந்து முடிந்து விட்டன! இதுதான் மாயை.

## 10. தண்டனை பெற்ற அமைச்சர்

முன்னொரு காலத்தில் ஓர் நாட்டில் இருந்த மந்திரி ஏதோ ஒரு குற்றம் செய்து விட்டான். அதனால் அரசன் உயரமான ஒரு கோபுரத்தின் உச்சி அறையில் மந்திரியைச் சிறை வைத்தான். நடு இரவில் மந்திரியின் மனைவி கோபுரத்தின் அடியில் வந்து, தன் கணவனைக் கூவியழைத்து, தான் எவ்விதமாவது உதவ முடியுமா என்று கேட்டாள். அடுத்த நாள் இரவு அவளை அங்கு வரும்படியாக மந்திரி கூறினான். வரும்போது அவள் தடித்த கயிறு ஒன்று, மெல்லிய கயிறு ஒன்று, சரடு ஒன்று, பட்டுநூல் கண்டு ஒன்று, வண்டு ஒன்று, சிறிது தேன் இவற்றைக் கொண்டு வரும்படி கூறினான். கணவன் கூறியதைக் கேட்டு வியப்புற்றாலும் மனைவி அடுத்த நாள் அப்பொருட்களை அங்கே, கொண்டு வந்தாள். வண்டின் தலையில் சிறிது தேனைப் பூசி, அதன் உடலில் பட்டு நூலை இறுகக் கட்டி, கோபுரத்தின் உச்சி நோக்கி வண்டின் தலை இருக்கும்படி சுவரில் வண்டை வைக்கும்படி மந்திரி சொன்னான். மனைவியும் அவ்வாறே செய்தாள். தேனின் மணம் வண்டை மேல்நோக்கித் தூண்ட வண்டு மேல் நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. கோபுர உச்சியை அடைந்த போது மந்திரி வண்டை பிடித்து, பட்டு நூலைப் பற்றிக் கொண்டான். பின்னர் சரட்டு நூலின் நுனியைப் பட்டு நூலில் கட்டும்படி மனைவியிடம் மந்திரி கூறினான். பட்டு நூலை மேலே இழுத்து மந்திரி சரட்டைப் பிடித்துக் கொண்டான். பிறகு சரட்டு நூலில் மெல்லிய

கயிற்றைக் கட்டச் சொன்னான். மெல்லிய கயிறு கைக்கு எட்டிய பின்பு பெரிய கயிற்றை அதன் மறு நுனியில் கட்டும்படி மந்திரி மனைவியிடம் கூறினான். பெரிய கயிற்றின் ஒரு நுனி மேலே வந்ததும் அந்த நுனியை அங்கிருந்த கம்பில் கட்டி, கயிற்றின் மூலமாய்க் கீழே இறங்கி, சிறையினின்று தப்பி ஓடி விட்டான்

இந்த உடலில் சுவாசம், பட்டு நூலுக்கு ஒப்பானது. சரடு, மெல்லிய கயிறு, தடித்த கயிறு இவற்றைப் பயன்படுத்தியது போன்று சுவாசத்தைப் படிப்படியாக ஒழுங்குபடுத்துவதன் மூலம் நாடி நரம்புகளையும், எண்ணங்களையும், பிராணனையும் ஒழுங்குபடுத்தி, மனிதன் முக்தி அல்லது விடுதலை பெறலாம் என்பது இக்கதையின் கருத்து.

# 11. புல்மேயும் சிங்கங்கள்

ஒரு பெண் சிங்கத்தைப் பற்றிய கதை உண்டு. அது பருத்தும் கருவுற்றும் இருந்தது. அது ஒரு சமயம் இரையைத் தேடி அலைந்து கொண்டிருந்த போது ஓர் ஆட்டு மந்தையைப் பார்த்தது. உடனே அதன் மேல் பாய்ந்தது. அந்த முயற்சியில் அந்தச் சிங்கம் இறந்து விட்டது. இறப்பதற்கு முன் அது ஒரு சிங்கக் குட்டியை ஈன்றது.

தாயற்ற அந்தச் சிங்கக் குட்டியை ஆடுகள் வளர்த்தன. அந்தக் குட்டி ஆடுகளுடனேயே வளர்ந்தது. புல்லையே தின்றது, ஆடுகளைப் போலவே கத்தியது. காலப் போக்கில் அந்தச் சிங்கக் குட்டி நன்கு வளர்ந்து ஒரு பெரிய சிங்கமாக மாறி விட்டது. ஆனால் அந்தச் சிங்கம் தன்னை ஓர் ஆடு என்றே எண்ணிக் கொண்டிருந்தது.

ஒருநாள் வேறொரு சிங்கம் இரை தேடிக் கொண்டு அங்கு வந்தது. அங்கே ஆடுகளுக்கு நடுவில் ஒரு சிங்கம் இருப்பதையும், அது ஆபத்துச் சமயத்தில் ஆடுகளைப் போலவே பயந்து ஓடுவதையும் கண்டு புதிய சிங்கம் வியப்படைந்தது. அது அந்த 'ஆட்டுச் சிங்க'த்தை நெருங்கி, 'நீ ஆடல்ல, சிங்கம்தான்' என்று சொல்ல முயன்றது. ஆனால் புதிய சிங்கம் தன்னை நெருங்கும்போதே 'ஆட்டுச் சிங்கம்' பயந்து ஓடியது. ஆகவே புதுச் சிங்கம் ஒரு நல்ல வாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருந்தது.

ஒருநாள் ஆட்டுச் சிங்கம் தூங்கிக் கொண்டிருப்பதைப் புதிய சிங்கம் பார்த்தது. புதுச் சிங்கம்

அதை நெருங்கி, ''நீ ஒரு சிங்கம்'' என்று கூறியது. அஞ்சி நடுங்கிய அந்த 'ஆட்டுச் சிங்கம்' புதிய சிங்கம் சொல்வதை நம்பாமல், ''நான் ஓர் ஆடு தான்'' என்று சொல்லிகொண்டே ஆட்டைப் போல் கத்தியது.

புதுச் சிங்கம் ஆட்டுச் சிங்கத்தை ஓர் ஏரிக்கு இழுத்துச் சென்றது. ஆட்டுச் சிங்கத்தைப் பார்த்து அது, ''தண்ணீரில் பார், நம் இருவருடைய உருவங்களின் பிரதிபிம்பமும் தெரிகிறது'' என்று கூறியது.

உடனே ஆட்டுச் சிங்கம் ஏரி நீரில் தென்பட்ட இரண்டு பிரதிபிம்பங்களையும் ஒத்துப் பார்த்தது. அது புதுச் சிங்கத்தையும் தன்னுடைய பிரதிபிம்பத்தையும் பார்த்துக் கொண்டது. அடுத்த கணத்திலேயே தான் ஒரு சிங்கம் என்ற எண்ணம் அதற்கு வந்து விட்டது. உடனே அது கர்ஜித்தது; ஆடு போல் கத்துவதையும் விட்டொழித்தது.

நீங்கள் சிங்கங்களே; தூய்மையான, எல்லையற்ற, முழுமையான ஆன்மாக்களே. பிரபஞ்சத்தின் சக்தி முழுவதும் உங்களுக்குள்ளேயே இருக்கிறது.

## 12. ஆன்மிக வீரம்

இந்தியாவின் மீது படையெடுத்து வந்த ஒரு சக்கரவர்த்தியின் ஆசிரியர், அவரிடம் இந்தியாவில் உள்ள ரிஷிகளைப் போய்ப் பார்க்குமாறு சொன்னார். வெகு நேரம் ஒரு ரிஷிக்காகத் தேடிய பிறகு, ஒரு தொண்டு கிழவர் பாறை ஒன்றின் மீது உட்கார்ந்திருப்பதைச் சக்கரவர்த்தி பார்த்தார். சிறிது நேரம் அவருடன் பேசியபோது, அந்த ரிஷியின் அறிவுத் திறமை சக்கரவர்த்தியை மிகவும் கவர்ந்தது. தம்முடன் தமது நாட்டிற்கு வருமாறு அவர் அந்த ரிஷியை அழைத்தார்.

அதற்கு அந்த ரிஷி, ''நான் வர முடியாது. இந்த காட்டில் இருப்பதே எனக்குத் திருப்தி அளிக்கிறது'' என்று சொன்னார். ''நான் உங்களுக்குச் செல்வம், பதவி எல்லாவற்றையும் அளிக்கிறேன். நான் இந்த உலகத்துக்கே சக்கரவர்த்தி'' என்று சக்கரவர்த்தி கூறினார். ''வேண்டாம்; அந்தப் பொருள்களிலெல்லாம் எனக்கு ஆசை கிடையாது'' என்று அந்த ரிஷி கூறி பதிலளித்தார்.

கோபம் கொண்ட சக்கரவர்த்தியோ, ''என்னுடன் வரவில்லை என்றால் உன்னைக் கொன்று விடுவேன்'' என்று கூறினார். அந்த ரிஷி அமைதியாகப் புன்னகை செய்து, ''சக்கரவர்த்தியே, நீ பேசியவற்றுள் எல்லாம் மிகவும் முட்டாள்தனமான பேச்சு இதுதான். உன்னால் என்னைக் கொல்ல முடியாது. சூரியனால் என்னை வற்றச் செய்ய முடியாது. நெருப்பு என்னை எரிக்க முடியாது. எந்த ஆயுதமும் என்னைக் கொல்ல முடியாது. ஏனென்றால் பிறப்பு, இறப்பற்ற, எப்போதும் நிலைத்திருக்கும் ஆன்மாவே நான்'' என்று சொன்னார். இது தான் ஆன்மீக வீரம்.

## 13. அசுரனும் தேவனும்

ஒரு தேவனும் ஓர் அசுரனும் ஆன்மஞானம் பெறுவதற்காக ஒரு மகானிடம் சென்றனர். அவரிடம் பல வருடங்கள் கல்வி கற்றபின், ''நீங்கள் தேடுகிற பொருள் நீங்களே'' என்று அவர்களிடம் கூறி, அவர்களை அனுப்பி விட்டார். இருவரும் தங்கள் உடலே ஆன்மா என்று நினைத்து, தங்கள் சுற்றத்தாரிடம் சென்று, ''நாங்கள் கற்க வேண்டியதைக் கற்று விட்டோம். உண்டு, உடுத்துக் களிப்போம். நாம்தான் ஆன்மா'' என்றனர். பேதமையே அசுரனின் இயல்பு. ஆதலால் அவன் மேற்கொண்டு சிந்திக்கவில்லை. எனவே, தானே கடவுள் அதாவது உடலே கடவுள் என்பதில் திருப்தி அடைந்து விட்டான். தேவன் சாத்வீக குணம் உடையவன். முதலில், ''இந்த உடலே பிரம்மம். ஆதலால் அது வலிமை உடையதாகவும், உடல் நலம் பெற்றதாகவும், நன்கு அலங்கரிக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும். எல்லாவித இன்பங்களையும், அதற்கு அளிக்க வேண்டும்'' என்று தவறாக அவனும் நினைத்தான். ஆனால், சில நாட்களில் ஆன்மா என்று தான் கருதியது உடல் அன்று என்று தெரிந்தது. எனவே அவன் மீண்டும் அம்மகானிடம் வந்து, ''ஐயனே! இவ்வுடலைத்தான் ஆன்மா என்று கூறினீர்களா? ஆன்மா மரணமற்றது. இவ்வுடலோ அழியக் கூடியது அல்லவா? என்றான். அம்மகானோ மீண்டும் மறுபடியும் ''நீயே அதுவாகிறாய்'' இதன் கருத்தைக் கண்டு கொள்'' என்றார்.

பிறகு அந்த தேவன், ''உடலை இயக்கும் பிராண சக்திகளே ஆன்மாவா?'' என்று யோசித்



தான். ஆனால் சிறிது நாட்களில், ''உணவு கொண்டால் பிராணசக்தி வலிமை பெற்று உள்ளது. பட்டினி கிடந்தால் அதன் வலிமை குன்றி விடுகிறது'' என்பதை அறிந்து, மறுபடியும் சென்று, ''ஐயனே! பிராணனை ஆன்மாவென்று கருதுகிறீர்களா?'' என்று கேட்டான். அவர் மறுபடியும், ''நீயே அதுவாக ஆகிறாய், கண்டு கொள்'' என்றார்.

தேவன் யோசிக்கலானான், ஆன்மா என்பது மனமாக இருக்கலாம்.' என்று நினைத்தான். ஆனால் மனம் சில சமயம் நல்லதாகவும், சில சமயம் கெட்டதாகவும் மாறிக் கொண்டிருக்கிறது. ஆன்மா மாறாமல் நிலையாக இருக்கும் என்று தெரிந்து மகானிடம் மறுபடி சென்று ''ஐயனே மனம்தான் ஆன்மா என்கிறீர்களா?'' என்று வினவினான். அவர் மறுபடியும், ''நீயே அதுவாகிறாய், கண்டு கொள்''' என்றார்.

தேவன் ஆலோசனை செய்து, தானே ஆன்மா என்று தெரிந்தான். ஆன்மா, மனத்திற்கும் அப்பால் உள்ளது; பிறப்பு இறப்பு, இல்லாதது. ஆன்மாவை ஆயுதங்கள் வெட்டா; தீ அதை எரிக்காது; நீர் அதை நனைக்காது; காற்று அதை உலர்த்தாது. ஆதி அந்தம் இல்லாதது; தொடுதற்கரியது; முழு அறிவுடையது; சர்வ சக்தி உடையது; அது உடலும் அன்று, மனமும் அன்று; இவற்றுக்கு அப்பால் அது உள்ளது. இவ்வாறு அறிந்த தேவன் திருப்தி அடைந்தான். உடலை நேசித்த அசுரன் உண்மையை அறியவில்லை.

# 14. வில்வ மங்களா

**பி**ராமண இளைஞன் ஒருவன் கிராமம் ஒன்றில் வசித்து வந்தான். அவன் மற்றொரு கிராமத்திலிருந்த ஒழுக்கம் தவறிய ஒரு பெண்ணிடம் காதல் கொண்டான். இரு கிராமங்களுக்கும் இடையில் பெரிய ஆறு ஒன்று இருந்தது. அவன் ஒவ்வொரு நாளும், சிறு படகின் மூலம் ஆற்றைக் கடந்து அந்தப் பெண்ணை சந்திப்பது வழக்கம். ஒரு நாள் அவன் தந்தையின் ஈமக்கடன்களைச் செய்ய வேண்டியிருந்தது. அன்று அவன் எவ்வளவுதான் அந்தப் பெண்ணை எண்ணி எண்ணி உருகினாலும் அவளிடம் செல்ல முடியாது. கிரியைகள் நடைபெற்றே ஆக வேண்டும்; இந்து சமுதாயத்தில் இவை மிகவும் முக்கியமானவை.

கிரியைகள் முடிவுற்றன; இரவும் வந்தது; அதனுடன் மேகம் எழுந்தது; பெரு மழை பொழிந்தது. ஆற்றில் வெள்ளம் பெருகியது. அப்போது ஆற்றைக் கடப்பது மிகவும் ஆபத்து, இருந்தாலும் விடாமல் அவன் ஆற்றின் கரையை அடைந்தான். அங்கு ஒரு சிறு படகுகூட இல்லை. ஆனால் அவனோ அவளிடம் செல்வதற்குத் துடித்தான். அவள் மீது கொண்ட காதலால் பைத்தியமாகி விட்டான். அங்கு ஒரு கட்டை மிதந்து கொண்டிருந்தது; அதைப் பற்றிக் கொண்டு அதன் உதவியால் மறு கரையை அடைந்து அவள் வீட்டிற்குச் சென்றான். கதவுகள் மூடப்பட்டிருந்தன. கதவைத் தட்டினான். சத்தம் யார் காதிலும் விழவில்லை. அவனால் திரும்பிப் போகவும் முடியவில்லை. சுவர் ஏறி உள்ளே குதிக்க எண்ணிய போது சுவரிலிருந்து ஒரு



கயிறு தொங்குவதைக் கண்டான். 'என் காதலி நான் ஏறி வருவதற்காகவே இந்தக் கயிற்றைத் தொங்க விட்டிருக்கிறாள் போலும்' என்று எண்ணிக் கொண்டு அந்தக் கயிற்றின் உதவியால் சுவர் மீது ஏற கால்தவறி விழுந்து விட்டான். அதனால் எழுந்த ஓசையில் வீட்டிலுள்ளவர்கள் விழித்துக் கொண்டார்கள்.

அந்தப் பெண்ணும் விழித்து வெளியே வந்து அவன் வீழ்ந்து கிடப்பதைப் பார்த்தாள். அவன் உடம்பில் துர்நாற்றம் வீசுவதைக் கண்டு பின்வருமாறு கேட்டாள்:

''உனக்கு என்ன நேர்ந்தது? உன் உடம்பில் துர்நாற்றம் அடிப்பதேன்? வீட்டினுள் நீ எவ்வாறு நுழைந்தாய்.'' அதற்கு அவன், ''என் காதலி அங்கே கயிற்றைத் தொங்க விட்டிருந்தாள், அதன் மூலம் நான் வந்தேன்'' என்றான்.

அவள் புன்னகையுடன் கூறினாள்: ''காதலுமில்லை! ஒன்றுமில்லை. நாங்கள் பணத்திற்காகவே உள்ளோம். நான் உனக்காகக் கயிற்றைத் தொங்க விட்டிருந்ததாக எண்ணினால், நீ ஒரு முட்டாள். அது சரி, எவ்வாறு ஆற்றைக் கடந்தாய்?''

''ஒரு மரக் கட்டையை பற்றிக் கொண்டேன்'' என்று கூறினான்.

''நாம் சென்று பார்க்கலாம்'' என்றாள் அந்தப் பெண்.

கயிறு என்று அவன் கருதியது எது? தொட்டவுடனே மரணத்தை விளைவிக்கக்கூடிய கொடிய விஷப்பாம்பாகும். அது தன் தலையை உள்ளே

வைத்துப் புற்றுக்குள் நுழையும் போது, அவன் கயிறு எனக் கருதி அதன் வாலைப் பற்றினன். காதலால் ஏற்பட்ட பைத்தியம் அவனை அவ்வாறு செய்யத் தூண்டியது. பாம்பு தலையை உள்ளேயும் உடலை வெளியேயும் வைத்திருக்கும் போது அழுந்தப் பற்றியதால் அதுதன் தலையை வெளியே எடுக்க முடியவில்லை. எனவே அவன் அதன் உதவியால் சுவரேறினன்.

''கட்டை எங்கே கிடைத்தது?'' என்று வினவினள் அவள்.

''ஆற்றில் மிதந்து வந்தது'' என்று கூறினன் அவன்.

அந்தக் கட்டை ஓர் அழுகிய பிணம். அதனை ஆறு கரையில் அடித்திருந்தது. அதையே அவன் கட்டை என்று தவருகக் கருதி விட்டான். அது தான் உடலில் உண்டாகிய துர்நாற்றத்திற்குக் காரணம். அவள் அவனைப் பார்த்து, ''எனக்குக் காதலில் ஒரு போதும் நம்பிக்கை இல்லை. நாங்கள் அதை நம்பவும் மாட்டோம். எங்களுக்குக் காதல் என்ருல் என்ன வென்று தெரியாது. ஆனல் நண்பரே, உங்கள் இதயத்தை ஏன் என்னைப் போன்ற ஒரு பெண்ணிடம் பறி கொடுக்க வேண்டும்? ஏன் அதை இறைவனுக்காகத் தரக் கூடாது? அவ்வாறு தந்தால் நிறைவு பெறலாமே?''

இவ்வாறு அவள் கூறியது அவன் மனதில் இடி விழுந்தது போல் ஆயிற்று. பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்ட ஒன்றைப் பற்றிய ஒளிக்கதிர் சிறிது தோன்றிற்று. ''கடவுள் இருக்கிருரா?'' என்று கேட்டான் அவன்.



''ஆம், ஆம் என் நண்பரே! கடவுள் இருக்கிருர்'' என்ருள் அவள்.

பின்னர் அவன் நடந்து சென்ருன்; ஒரு காட்டை அடைந்தான்; அழுதான்; பிரார்த்தித்தான்: ''என் தலைவா! எனக்கு நீயே வேண்டும். கடும் வேகத்தில் உந்தி வருகின்ற எனது அன்பு ஆறு சிறு குட்டைகளில் புக முடியாது. எல்லையற்றப் பெருங்கடல் தான் அதற்கு வேண்டும். நீ அன்புக் கடலாகத் திகழ்கிருய்; என்னை நோக்கி வா.''

சில ஆண்டுகள் அவன் காட்டில் தங்கினன். பிறகு அவன் வெற்றி பெற்று விட்டதாகக் கருதினன். சந்நியாசியாகி நகரங்களுக்குள் சென்ருன்.

ஒரு நாள் கங்கைக் கரையில் அமர்ந்திருந்தான். அப்போது, அந்த நகரத்து வணிகனின் மனைவியான அழகிய பெண்மணி அவ்வழியே சென்ருள். அவளைக் கண்டதும் அந்த அழகிய முகம் மறுபடியும் அவனை வசீகரித்துவிட்டது. எழுந்து அவளது வீடு வரையில் பின் தொடர்ந்து சென்ருன். அப்போது அவள் கணவனும் வந்து சேர்ந்தான். காவியுடையில் இருந்த சந்நியாசியை நோக்கி, ''வாருங்கள் ஐயனே! நான் தங்களுக்காக என்ன செய்ய வேண்டும்?'' என்ருன்.

அவன், ''நான் கொடுத்தற்கரிய ஒன்றை உன்னிடம் கேட்பேன்.''

''ஐயனே! எது வேண்டுமானுலும் கேளுங்கள். நானே இல்லறத்தான், யார் எதைக் கேட்டாலும் கொடுக்கத் தயாராயுள்ளேன்'' என்ருன் வணிகன்.

துறவி, ''நான் உன் மனைவியைக் காண விரும்புகிறேன்'' என்று கூறினன்.

நூலகம்


இல்லறத்தா[illegible]தென்ன! நான் தூயவன்; என் மனைவியும் தூயவள்; கடவுள்தான் எல்லாரையும் காப்பவர். உள்ளே வாருங்கள்'' என்றான்.

துறவி உள்ளே வந்தான். கணவன் அவனுக்குத் தன் மனைவியை அறிமுகப்படுத்தினான்.

"நான் உமக்கு என்ன செய்ய வேண்டும்'' என்று கேட்டாள் அவள். துறவி சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு பிறகு கூறினான்: ''அம்மா! தாங்கள் தலையில் வைத்திருக்கும் இரண்டு ஊசிகளைத் தருவீர்களா?''

அவள் அவற்றைத் தந்தாள். துறவி அந்த ஊசிகளை வாங்கித் தன் கண்களில் செருகியவாறே, ''தொலையுங்கள்! அயோக்கியர்களே! இனி நீங்கள் எதையும் காண முடியாது. நீங்கள் பார்ப்பதானால், பிருந்தாவனச் சோலை இடையனையே ஆன்மீகக் கண்களால் காண வேண்டும்.'' என்று கூறினான். அவன் கண்களிரண்டும் குருடாகிவிட்டன.

பிறகு அவன் காட்டிற்குத் திரும்பினான். அங்கே மறுபடியும் அழுதான்; அழுது கொண்டே இருந்தான். மனிதனின் பக்திப் பெருக்கே உண்மையுணரப் போராடுகின்றது; இறுதியில் அவன் வெற்றி பெற்றான். அவன் கிருஷ்ணன் வடிவில் கடவுளைக் கண்டதாக கூறப்படுகிறது. பிறகு அவன் புறக்கண்களை இழந்ததற்கு வருந்தினான்; ஏனெனில், அகக் கண்களால் மட்டும்தானே அவன் கடவுளைக் காண முடிந்தது! அவன் பக்திப் பாடல்கள் சில பாடினான். வில்வமங்களா என்னும் அந்தத் துறவியோ தனக்குக் கடவுள் உண்டு என்று உணர்த்திய பெண்ணையே முதற் குருவாக வைத்து வணங்கி பின் நற்கதி அடைந்தார்.



ISBN 81-7120-310-8

Vivekanandarin Viveka Kathaigal (Tamil) Rs.6.00